# கம்பம் நகராட்சி

**2019–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் (30.09.2019) ஆம் நாள் திங்கள் கிழமை பிற்பகல் 4.00** மணிக்கு, கம்பம் நகர்மன்றக் கூட்ட அரங்கில் தனிஅலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

## கூட்டப் பொருட்கள்

| | |
|---|---|
| **1.** | நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர்(பொ) அவர்களின் 9/2019–ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது |
| | **அலுவலகக் குறிப்பு**: மன்றம் பதிவு செய்யலாம். |
| **2.** | இந்நகராட்சிக்கு சொந்தமான சுங்கம் நடுநிலைப்பள்ளி புதிதாக கட்டியுள்ளதில் போதிய இடவசதி இல்லாமல் குழந்தைகள் மிகவும் சிரப்படுவதாலும், பள்ளி நடத்த மிகவும் சிரமமாக உள்ளதாக தலைமை ஆசிரியர் கோரியுள்ளதன்படி, கீழ்கண்டுள்ள இடங்களில் கீழ்குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டின் அடிப்படையில் கல்வி நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| **1)** | நகராட்சிக்கு சொந்தமான சுங்கம் நடுநிலைப்பள்ளி அங்கன்வாடி மையத்தின் மேல்தளத்தில் புதிதாக ஷெட் அறை அமைக்கும் பணி | **ரூ. 5,50,000/–** |
| **2)** | நகராட்சிக்கு சொந்தமான சுங்கம் நடுநிலைப்பள்ளி வளாகத்தில் உள்ள உதவி கல்வி அலுவலர் அலுவலக கட்டிடத்தின் மேல்தளத்தில் புதிதாக ஷெட் அறை, படிக்கட்டு மற்றும் பால்கனி அமைக்கும் பணி | **ரூ. 9,50,000/–** |
| **3)** | நகராட்சிக்கு சொந்தமான சுங்கம் நடுநிலைப்பள்ளி கிழக்கு பகுதியில் மாணவர்கள் கழிப்பிடம் அமைக்கும் பணி மற்றும் சத்துணவு கூடம் ஷெட் அமைக்கும் பணி | **ரூ. 6,00,000/.** |

| | |
|---|---|
| | **அலுவலகக்குறிப்பு**.. மன்றம் அனுமதிக்கலாம். |
| **3.** | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் :31 காந்தி நகர் பகுதியில் அமைந்துள்ள மேல்நிலைத் தொட்டி வளாகத்தில் பணியாளர் நலன் கருதி பழுதடைந்த மேற்கூரையினை அகற்றிவிட்டு, புதிதாக ஓய்வு அறை அமைத்திடவும், மற்றும் சுற்றுச்சுவர் பழுதாகியுள்ளதையும், மேல்நிலை தொட்டி கைப்பிடி சுவர் இல்லாமல் உள்ளதாலும், தொட்டிக்குள் இறங்குவதற்கு ஏணி பழுதடைந்துள்ள நிலையிலும் உள்ளதால் கைப்பிடி சுவர், மேல்நிலை தொட்டி பூச்சு மற்றும் சிமெண்ட் தளம் அமைத்திடவும், மற்றும் வார்டு எண். **9** வடக்குபட்டி மேல்நிலை தொட்டியில் உள்ள படிக்கட்டு உட்புரம் சிமெண்ட் பூச்சு பெயர்ந்து உள்ளதால் அவற்றில் சிமெண்ட் பூச்சு மற்றும் வர்ணம் பூசும் பணிகள் செய்திட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ. **20.00** இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். |

| | |
|---|---|
| 4. | இந்நகராட்சி வார்டு எண்.31, நந்தகோபால்சாமி நகரில் நிறுவப்பட்டு வரும் மைக்ரோ கம்போஸ்ட் சென்டர் அருகில் சாலையின் மைய பகுதியில் வாகன போக்குவரத்திற்கு இடையூறாக உள்ள மின் கம்பத்தை மாற்றியமைக்க கோரி மின் வாரியத்திற்கு விண்ணப்பபிக்கப்பட்டதில், மேற்படி மின் கம்பத்தை மாற்றம் செய்ய உரிய மதிப்பீட்டு கட்டணமாக ரூபாய் 14780/– செலுத்தகோரி கம்பம் மின் வாரிய வடக்கு பிரிவு இளமின் பொறியாளர் அவர்கள் 17.09.2019ம் தேதிய 296/19ம் எண் கடிதம் மூலம் தெரிவித்துள்ளார். எனவே, சாலையின் மையப்பகுதியில் உள்ள மின் கம்பத்தை மாற்ற ரூ.14780/–ஐ மின் வாரியத்திற்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு**.. மன்றம் அனுமதிக்கலாம். |
| 5. | இந்நகராட்சி வார்டு எண் 28, கிராமசாவடித்தெரு கதவு எண்62ஏ, குடியிருப்பு இடத்தின் உரிமையாளர் எஸ்.ராமகிருஷ்ணன் என்பவர், தனது வீட்டின் முன்புறம் உள்ள நகராட்சிக்கு சொந்தமான மினி பவர் பம்பின் ஆழ்குழாய் கிணற்றின் குழாய்கள் தரைமட்டத்திற்கு மேல் உள்ளதால் போக்குவரத்திற்கு மிகுந்த இடையூறு ஆவதால் அதனை தனது சொந்த செலவில் தரைமட்டத்திற்கு கீழே மிகுந்த பாதுகாப்புடன் மாற்றி கொள்ளவும், மேலும் அதன் மின் இணைப்பையும் தனது சொந்த செலவில் தென்புறம் மாற்றியமைக்கவும் அனுமதி கோரியுள்ளார் மன்ற அனுமதிக்கு. |
| | **அலுவலகக் குறிப்பு** :– மேற்படி பணி தொடர்பாக நகராட்சிக்கு நிதியிழப்பு ஏதும் இல்லாததால், மனுதாரர் கோரியபடி தனது சொந்த செலவில் செய்து கொள்ளவும், பின்னாளில் இது தொடர்பாக எவ்வித உரிமையும் கோர இயலாது என்ற நிபந்தனையுடன் அனுமதிக்கலாம். |
| 6. | இந்நகராட்சியில் குடிநீர் விநியோக பணிகளுக்கு பயன்படுத்தி கழற்றப்பட்ட பயன்படுத்த இயலாத பழைய கழிவு பொருட்கள் கீழ்கண்டவாறு அலுவலக பழைய பொருட்கள் இருப்பில் உள்ளதை ஏல நடவடிக்கை மூலம் அப்புறப்படுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>1) 1 1/4 " GI Pipe – 100 nos.<br>2) ½ " rod – 100 nos.<br>3) Water Tank – 20 nos<br>4) Stand – 1no<br>5) Head – 10 nos<br>6) 3" CI pipe – 1no<br>7) 3" Sulice value – 5 nos<br>8) 4" Sulice value – 2nos<br>9) 5" Sulice value – 2Nos<br>10) 6" sulice value – 2 nos<br>11) 12" Sulice value –1no |
| | அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். |
| 7. | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு 11, கம்பம் மெட்டு ரோடு சர்வே வார்டு A, பிளாக்–22, நகரளவு எண்.10–இல் உள்ள இடத்தினை திருமதி.அ. பொன்னுத்தாய் க/பெ. அய்யாவு என்பவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாகவும், அதனை அகற்றக்கோரியும் திரு. சு. ரமேஷ் த/பெ. சுப்புராயலு என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ரிட் மனு WP.(MD)No.7516/2017 தாக்கல் செய்ததில் நீதிமன்றம் 06.07.2017–ஆம் தேதிய தீர்ப்பில் மனுதாரரின் கோரிக்கையை பரிசீலனை செய்து நான்கு வார காலத்திற்குள் நடவடிக்கை மேற்கொள்ள உத்திரவிடப்பட்டது. அதன்படி மேற்கண்ட இருவருக்கும் அறிவிப்பு வழங்கப்பட்டு அளவுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு |

| | |
|---|---|
| | ஆக்கிரமிப்புகளை அகற்றிக் கொள்ள திருமதி.அ. பொன்னுத்தாய் க/பெ. அய்யாவு என்பவர் இந்நகராட்சி மூலம் ஆக்கிரமிப்பு அகற்ற அறிவிப்பு செய்யப்பட்ட நேர்வில் இந்நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண்.WP.(MD)No.18972/2018-இல் வழக்கு தொடர்ந்த வழக்கில் மனுதாரர் திருமதி. அ. பொன்னுத்தாய் க/பெ. அய்யாவு என்பவரின் கோரிக்கையை 6 வாரத்திற்குள் பரிசீலிக்க உத்தரவிடப்பட்டது. இந்நிலையில் திரு. சு. ரமேஷ் த/பெ. சுப்புராயலு என்பவர் சார்பாக அவரது வழக்கறிஞர் மூலம் நீதிபேரணை WP.(MD)No. 7516/2017–இன்மீது நடவடிக்கை இல்லையென தெரிவித்து இந்நகராட்சியின் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்வதாக தெரிவித்து நோட்டீஸ் வரப்பெற்றது. அதன்படி திருமதி.அ. பொன்னுத்தாய் என்பவருக்கு மேற்படி ஆக்கிரமிப்பினை அகற்றிக் கொள்ள இந்நகராட்சியின் மூலம் இதே எண்ணிட்ட இதேஎண்ணிட்ட 14.12.2018–ஆம் தேதியன்று இறுதி அறிவிப்பு கடிதம் அனுப்பப்பட்டது. இந்நிலையில் திருமதி.அ. பொன்னுத்தாய் என்பவர் நகராட்சிக்கு எதிராக உத்தமபாளையம், சார்பு நீதிமன்றத்தில் வழக்கு (ஓ.எஸ்.எண்.241/2018) தொடுத்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கை நடத்தி தருமாறும், மேற்படி வழக்கிற்கான கட்டணம் ரூ.5000/–ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். |
| 8. | கம்பம் நகராட்சி பகுதிகளில் நுண் உரம் செயலாக்க மையங்கள் (MCC) மூலம் மக்கும் குப்பை கழிவுகளிலிருந்து உரம் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. சென்னைநகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.19396/2017/பி3 ஆம் தேதிய சுற்றறிக்கையில் நுண் உரம் செயலாக்க மையங்களில் தயாரிக்கப்படும் உரத்தினை ஒரு கிலோ ரூ.3/ மற்றும் ரூ.5/க்கும் விற்பனை செய்யவும் மற்றும் விவசாயிகளுக்கு உரம் இலவசமாக வழங்கவும், அவ்வாறு விற்பனை செய்யும் தொகையினை நுண் உரம் செயலாக்க மையத்தில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களுக்கும் பிரித்து வழங்குவதற்கும் அறிவுறுத்தப்படுகிறது. அதன்படி நுண் உரம் செயலாக்க மையத்தில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களுக்கும் பிரித்து வழங்குவதற்கும் அறிவுறுத்தப்படுகிறது. அதன்படி நுண் உரம் செயலாக்க மையங்களில் தயாரிக்கப்படும் உரத்தினை ஒரு கிலோ ரூ.3/க்கு விற்பனை செய்யவும், அவ்வாறு விற்பனை செய்யும் தொகையினை நுண் உரம் செயலாக்க மையத்தில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களுக்கும் பிரித்து வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 3136/2014/எச்1) |
| 9. | கம்பம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் TN 60 T 4504 வாகனத்திற்கு 26.10.2019 உடன் தகுதிச்சான்று முடிவடைவதால், மராமத்து பணிகள் செய்து புதிதாக தகுதிச்சான்று பெறுவதற்கு உத்தேச செலவினம் ரூ.1,60,000/ ஐ (ரூபாய் ஒரு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு: 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அதிகாரியின் முன் அனுமதி பெற்று தகுதிச்சான்று பெறுவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம். |

| | |
|---|---|
| **10.** | இந்நகராட்சியின் மூலம் செயல்படுத்தப்படும் ரூ. 10.00 இலட்சத்திற்கு மேலான திட்டப்பணிகள் அனைத்தும் மின்னணு ஒப்பந்தப்புள்ளி முறையில் ( E-Tendering) தமிழ்நாடு அரசு ஒப்பந்தப்புள்ளி இணையதளத்தில் பதிவேற்றம் செய்த ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகிறது. இதனை மின்னணு கையொப்ப அட்டை (Digital Signature Card) மூலம் பதிவு செய்யப்படவேண்டியுள்ளது. தற்போது நகராட்சி பொறியாளருக்கு புதிதாக DSC கார்டு வாங்கிடவும், நகராட்சி இளநிலை பொறியாளருக்கு ஏற்கனவே உள்ள கார்டினை புதுப்பித்திடவும் DSC கார்டு தயார் செய்து வழங்கிடும் பார்கவன் கன்சல்டன்சி , மதுரை நிறுவனம் மூலம் வாங்கிட ஆகும் உத்தேச செலவினம் ரூ. 8,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** — மன்றம் அனுமதிக்கலாம். |

**ஒப்பம்/— திருமதி. இ. செல்வராணி**
**ஆணையாளர்(பொ) மற்றும் தனி அதிகாரி,**
**கம்பம் நகராட்சி.**

**நாள். 30.09. 2019**
**இடம். கம்பம்**